நல்லூர் இ... நூலகம்
... மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper
பக்கங்கள் 04
விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | பங்குனி 22 | [04-04-1993] | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 45

## உரிய படிவங்களின்மையால் ஓய்வூதியம் பெறத் தாமதம்

வடக்கு, கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் உரிய படிவங்கள் இல்லாததால் இளைப்பாறிய ஊழியர்களின் ஓய்வூதியவிபரங்களைப் பூரணப்படுத்த முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. படிவங்கள் இல்லாத காரணத்தால் சில வருடங்களுக்கு முன்பு இளைப்பாறியவர்களுக்குக் கூட ஓய்வூதியம் வழங்க முடியாத நிலை உருவாகியுள்ளதாக, வடக்கு கிழக்கு மாகாண சபை நிர்வாக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இளைப்பாறிய உள்ளூராட்சி ஊழியர்களுக்கு உடன் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தலைவர் ஆர். பி. ராஜகாரியர் ஓய்வூதியப் பணிப்பாளரைக் கேட்டுள்ளார்.

### தமிழர் தேசிய இனப் பிரச்சினையை

# சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்வேன்

### மன்னார் ஆயர் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

இலங்கையின் இனப்பிரச்சினையை சர்வதேச மட்டத்திற்கு தாம் கொண்டுசெல்லப் போவதாக மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி. வணக்கத்திற்குரிய இராயப்பு யோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார். ஆசிய ஆயர் சம்மேளனத்தினூடாக தாம் இனப்பிரச்சினையை சர்வதேச மட்டத்துக்கு தெரியப்படுத்தப் போவதாகக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; பயிற்சிக்காக தான் கொங்கொங் சென்றிருந்த போது சுமார் 13 நாடுகளைச் சேர்ந்த ஆயர்களைத் தாம் சந்தித்ததாகவும் இவர்கள் இலங்கை இனப் பிரச்சினை பற்றி தன்னிடம் பிரஸ்தாபித்ததாகவும் இவ் ஆயர்களின் ஒத்துழைப்புடன் ஆசிய ஆயர் சம்மேளனத்தில் இப் பிரச்சினையை முன்வைத்து அதனூடாக சர்வதேச மட்டத்துக்கு இனப்பிரச்சினையைத் தெரியப்படுத்த உள்ளதாகவும் அவர்தெரிவித்தார். குறிப்பாக இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளுக்கு இனப்பிரச்சினை குறித்து தெளிவை ஏற்படுத்துவதற்கு ஆசிய ஆயர் சம்மேளனம் பாடுபடும் என்றும் ஆயர் தெரிவித்தார்.

இலங்கை அரசியல் வாதிகள் எப்பொழுதும் சுயநலப்போக்குடனேயே செயற்பட்டு வந்துள்ளனர் என்றும் இவர்கள் ஒரு போதும் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# ஐம்பது தமிழ் அகதிகளை நோர்வே திருப்பி அனுப்பும்

(ஒஸ்லோ)

அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பித்த ஐம்பது 'இலங்கைத் தமிழர்களின் விண்ணப்பங்களை நோர்வே அரசு நிராகரித்துள்ளது. இந்த ஐம்பது பேரையும் திருப்பி அனுப்புவதென்றும் நோர்வே அரசு முடிவெடுத்துள்ளது.

திருப்பி அனுப்பப்படுபவர்களைக் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து பாதுகாப்பாகக் கொழும்பில் உள்ள அவர்கள் இருப்பிடங்களுக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் பொறுப்பேற்றுள்ளது.

நோர்வேயில் சுமார் 5100 இலங்கைத் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்பது குறிப்பி

## இரண்டு நோயாளிகள்

கிளாலி – பூநகரி

### படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச்சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என தமிழீழ விடுதலைப் புலிகள் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

நீர்கொழும்பில்

### இளைஞர் கைது

மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நீர்கொழும்புப்பகுதியில் வைத்துப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் புலிகளின் வெடிகுண்டுப் பிரிவைச்சேர்ந்தவராவார் என்று நீர்கொழும்புப் பொலிசார் கூறியுள்ளனர்.

### ஒயில் விற்றவர் கைது

(கொழும்பு)

புலிகளுக்கு கடலில் வைத்து எஞ்சின் ஒயில் விற்பனை செய்பவர் ஒருவரை பொலிசார் கைது செய்துள்ளனராம்.

நீர்கொழும்பைச் சேர்ந்த 35 வயதுடைய இந் நபர் மாதம் நான்கு ஐந்து தடவைகள் கற்பிட்டிக்கு அப்பால் உள்ள ஆழ்கடல் பகுதியில் வைத்து இதனை விநியோகித்து வந்துள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

### பலாலியில் 20 இளைஞர் தடுத்து வைப்பு

[வடமராட்சி]

பலாலி முகாமில் தற்போது 20 இளைஞர்கள் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகவும் இவர்கள் விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டதாகவும் நேற்று விடுதலையாகி வந்த நாவாந்துறையைச் சேர்ந்த ஜோசெப் ஆபிரகாம்

### மயிலந்தனை படுகொலை

# நீதி விசாரணை பொலநறுவ மாற்றம்

### தமிழ் மக்கள் பலத்த எதிர்ப்பு

[கொழும்பு]

மயிலந்தனையில் கடந்த ஆகஸ்ட் மாதம் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் மட்டக்களப்பு நீதிமன்றத்திலிருந்து பொலநறுவ நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இவ் அறிவித்தலை நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி நீதிமன்றத்தில் வைத்து வெளியிட்டார்.

ஆனால் இவ்வழக்கில் முக்கிய சாட்சிகளாக உள்ள 35 பேர் பொலநறுவைக்குச் செல்வதால் உயிராபத்து ஏற்படக்கூடிய நிலை உள்ளதுடன் போக்கு வரத்துப் பிரச்சினையும் இருப்பதாகவும் இதனால் இவ்வழக்கு விசாரணைகள் மட்டக்களப்பிலேயே நடைபெறவேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசேப் பரராஜசிங்கம் கேட்டுள்ளார்.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி அராலித்துறையில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட உயர் இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டதை அடுத்து 9 ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தால் இந்த 35 பொதுமக்களும் படுகொலை செய்யப்பட்டதும் விசாரணைகளின்பின் 23 இராணுவத்தினருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதும் தெரிந்ததே.

# "ஷெல்"லைப் பரீட்சித்த வாலிபர் பலியானார்

### பாலமோட்டையில் பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்தில் உள்ள பாலமோட்டை கிழவிக்குளம் என்ற பகுதி வயல்வெளியில் காணப்பட்ட வெடிக்காத ஷெல் ஒன்றை எடுத்து தட்டிப் பார்த்தபோது அது வெடித்த

...மடைந்துள்ளார்.

நேற்றுக்காலை 10 மணியளவில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் மார்க்கண்டு மன்மதராஜா (வயது 18)என்ற இளைஞரே மரணமடைந்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் மன்னாரில் இடம்பெற்ற இதேபோன்ற ஒரு சம்பவத்தில் 4 மாணவர்கள் பலியாகியதும் 14 மாணவர்கள் காயமடைந்ததும் தெரிந்ததே.

தாகவும் இவர்கள் இலங்கை இனப் பிரச்சினை பற்றி தன்னிடம் பிரஸ்தாபித்ததாகவும் இவ் ஆயர்களின் ஒத்துழைப்புடன் ஆசிய ஆயர் சம்மேள

அவர் தெரிவித்தார். குறிப்பாக இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளுக்கு இனப்பிரச்சினை குறித்து தெளிவை ஏற்படுத்துவதற்கு ஆசிய ஆயர் சம்மேள

துள்ளனர் என்றும் இவர்கள் ஒரு போதும் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கைது செய்துள்ளனராம்.

நீர்கொழும்பைச் சேர்ந்த 35 வயதுடைய இந் நபர் மாதம் நான்கு ஐந்து தடவைகள் கற்பிட்டிக்கு அப்பால் உள்ள ஆழ்கடல் பகுதியில் வைத்து இதனை விநியோகித்து வந்துள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

போக்கு வரத்துப் பிரச்சினையும் இருப்பதாகவும் இதனால் இவ் வழக்கு விசாரணைகள் மட்டக்களப்பிலேயே நடை

துறையில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட உயர்

விசாரணைகளின்பின் 23 இராணுவத்தினருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதும் தெரிந்ததே.

# ஐம்பது தமிழ் அகதிகளை நோர்வே திருப்பி அனுப்பும்

(ஒஸ்லோ)

அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பித்த ஐம்பது 'இலங்கைத் தமிழர்களின் விண்ணப்பங்களை நோர்வே அரசு நிராகரித்துள்ளது. இந்த ஐம்பது பேரையும் திருப்பி அனுப்புவதென்றும் நோர்வே அரசு முடிவெடுத்துள்ளது.

திருப்பி அனுப்பப்படுபவர்களைக் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து பாதுகாப்பாகக் கொழும்பில் உள்ள அவர்கள் இருப்பிடங்களுக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் பொறுப்பேற்றுள்ளது.

நோர்வேயில் சுமார் 5100 இலங்கைத் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பலாலியில் 20 இளைஞர் தடுத்து வைப்பு

[வடமராட்சி]

பலாலி முகாமில் தற்போது 20 இளைஞர்கள் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகவும் இவர்கள் விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டதாகவும் நேற்று விடுதலையாகி வந்த நாவாந்துறையைச் சேர்ந்த ஜோசெப் ஆபிரகாம் தெரிவித்தார். (யோ)

## இரண்டு நோயாளிகள் விமானமூலம் பயணம்

(வடமராட்சி)

யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து இரண்டு நோயாளிகள் அவசர சிகிச்சைக்காக நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் பருத்தித்துறையில் தரித்து நின்ற கப்பல் மூலம் பலாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டு விமானம் மூலம் கொழும்பைச் சென்றடைந்தனர்.

மூளையில் நரம்புத் தளர்ச்சியினால் பாதிக்கப்பட்ட வடிவேலு பாலசுப்பிரமணியம் (வயது 31), சி. பரமநாதன் (வயது 30) ஆகிய இருவரையும் டாக்டர் திரு. சிவபாலன் கூட்டிச் சென்றார். [யோ]

## உணவுப் பொருள்களுடன் குமண வந்து சேர்ந்தது

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன், யாழ். தொழில் நுட்பக்கல்லூரி பரீட்சை வினாத்தாள்கள், க. பொ. த. சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகள் என்பவற்றுடன் நேற்று குமண கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்தது

இன்றுகாலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் எனவும், குமாரி, குமண ஆகிய இரு கப்பல்களிலிருந்தும் உணவுப்பொருள்கள் இறக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# பலாலி படைமுகாமிலிருந்து நேற்று ஐவர் விடுவிப்பு

(வடமராட்சி)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஐந்துபேர் விடுவிக்கப்பட்டு நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அனுசரணையுடன் 'குமாரி' கப்பல் மூலம் யாழ்ப்பாணம் கூட்டி வரப்பட்டனர். இதில் ஒருவர் வயோதிப நோயாளியாவார்.

நேற்று விடுவிக்கப்பட்டவர்கள் ஒரு மாதகால எல்லைக்குள் கடலிலும், மற்றும் சுற்றிவளைப்பின்போதும் சிறிலங்கா படைகளினால் கைது செய்யப்பட்டு பலாலியில் வைக்கப்பட்டிருந்தவர்கள் ஆவர்.

சுழிபுரம் மேற்கைச்சேர்ந்த கந்தையாசிவராசா(வயது36), அம்பலம் மதியாபரணம் (வயது 48), காரைநகரைச் சேர்ந்த சின்னத்தம்பி நாகராசா(வயது39), நாவாந்துறையைச் சேர்ந்த யேசெப் ஏபிரகாம் (வயது 42), உடுவிலைச் சேர்ந்த பிலிப்பு புலேந்திரம் (வயது 61) ஆகியோரே இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்கள்.

இவர்களை செஞ்சிலுவைச் சங்கத்தினர் நேற்று உறவினர்களிடம் ஒப்படைத்தனர். (யோ)

# "ஷெல்"லைப் பரீட்சித்த வாலிபர் பலியானார்

## பாலமோட்டையில் பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்தில் உள்ள பாலமோட்டை கிழவிக்குளம் என்ற பகுதி வயல்வெளியில் காணப்பட்ட வெடிக்காத ஷெல் ஒன்றை எடுத்து தட்டிப் பார்த்தபோது அது வெடித்ததில் இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை 10 மணியளவில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் மார்க்கண்டு மன்மதராஜா (வயது 18)என்ற இளைஞரே மரணமடைந்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் மன்னாரில் இடம்பெற்ற இதேபோன்ற ஒரு சம்பவத்தில் 4 மாணவர்கள் பலியாகியதும் 14 மாணவர்கள் காயமடைந்ததும் தெரிந்ததே.

## வவுனியா பயணிகள் மீது புளொட் தாக்குதல்

வவுனியா தாண்டிக்குளம் சிறிலங்கா இராணுவக் காவலரண் பகுதியில் நிற்கும் புளொட் குழுவினர் சோதனை முகாமூடாகச்செல்லும் பயணிகளைத் துன்புறுத்திவருவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

பயணிகளின் பொதிகளை அணுவணுவாகச் சோதனையிடும் இவர்கள் கண்மூடித்தனமாக மக்களைத்தாக்கியும் வருகின்றனர். (86)

## தமிழர்மீது தீர்வைத் திணிக்க முயலக் கூடாது

### விக்கிரமபாகு கருணாரட்ண

[லண்டன்]

வடக்குகிழக்கு தமிழர் பிரச்சினை இன்றுமுக்கியம்வாய்ந்த ஒன்றாகும். அவர்களின்நியாயபூர்வமான உரிமைகள் வழங்கப்படவேண்டும். அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவொரு தீர்வையே முன்வைக்க வேண்டுமே தவிர ஒருதீர்வைதிணிக்க முற்படக் கூடாது. அவ்வாறு முற்பட்டால் அது நிரந்தர அமைதியாக இருக்க மாட்டாது.

இவ்வாறு ஜனதா விமுத்தி அமைப்பின் முக்கியஸ்தரும் நவசமசமாஜகட்சிசெயலாளருமான விக்கிரமபாகு கருணாரட்ண நேற்று பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் வடக்குகிழக்கு பிரச்சினைக்கு இராணுவதீர்வு காணமுடியாது. அரசியல் தீர்வே முக்கியமானது. அரசியல் தீர்வு தமிழ் மக்களினால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமைய வேண்டும் என்றார்.

## சந்திரசேகரனை விடுவிக்க வாசுதேவா கோரிக்கை

(கொழும்பு)

மலைநாட்டு மக்கள் முன்னணித் தலைவர் பி. சந்திரசேகரனை விடுதலைசெய்யுமாறு நவசமசமாஜக் கட்சித் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார கேட்டுள்ளார்.

அவர் விடுத்த அறிக்கையில்;

சந்திரசேகரன் இரண்டு வருடங்களாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். மாகாணசபைத் தேர்தலை ஒரு ஜனநாயகத் தேர்தல் என்று கருதினால் அதில் சந்திரசேகரன் போட்டியிடும் வகையில் அவரை விடுதலை செய்யவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

சகல முற்போக்கு மற்றும் ஜனநாயகச் சக்திகள் சந்திரசேகரனின் விடுதலைக்காகப் போராடவேண்டும் என்றும் அவர் தனது அறிக்கையில் வற்புறுத்தியுள்ளார்.

சந்திரசேகரன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(04ஆம் பக்கம் பார்க்க)

## டொரொன்ரோ நகரில் மோதல்

## வல்வை, உடுப்பிட்டி வாசிகள் கனேடியபொலிசாரால்கைது

கனடாவில் டொரொன்டோ பகுதியில் இடம்பெற்ற மோதலில் கைதானவர்கள் உடுப்பிட்டி, வல்வெட்டித்துறைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகின்றது.

கைதான எட்டுப்பேரில் மோகனதாஸ் கனகசபை (வயது 28) சொர்ணலிங்கம் ஆகிய இருவரும் அடங்குகின்றனர். இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ள கனேடியப் பொலிசார் துப்பாக்கிகளை கவனயீனமாகப் பயன்படுத்திப் பீதியை ஏற்படுத்தியதாகக் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இச் சம்பவத்தில் கனேடியர் உட்பட பலர் காயமடைந்தனர். ஆறு கார்களும் சேதமாகின.

கலாசார நிகழ்ச்சி ஒன்று தொடர்பாக எழுந்த பேதமே மோதலுக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## செஞ்சிலுவை பிரதிநிதி யாழ். திரும்பினார்

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்திலிருந்து வாகன அணி மூலம் உணவுப் பொருள்களை குடாநாட்டிற்குள் கொண்டு வருவது தொடர்பாக பலாலி இராணுவ முகாமில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளச் சென்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வதிவிடப் பிரதிநிதி நேற்று யாழ்ப்பாணம் திரும்பியுள்ளார்.

இவர் பலாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளைச் சந்தித்து வந்ததாகவும் தெரியவருகிறது.

## பெருமாளைச் சந்திக்க பிரேமச்சந்திரன் பயணம்

(கொழும்பு)

பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து ஈ.பீ.ஆர்.எல். எவ். விலகியது சம்பந்தமான காரணங்களை வடக்கு,கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாளுக்குத் தெரிவிப்பதற்காக ஈ. பி. ஆர். எல். எவ். பாராளுமன்ற உறுப்பினர் கே. பிரேமச்சந்திரன் இவ்வாரம் இந்தியா சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈ. பி. ஆர். எல். எவ். உட்பட தமிழ்க் கட்சிகள் சமீபத்தில் ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் விபரங்களையும் இவர் வரதராஜப் பெருமாளுக்குத் தெரிவிக்க உள்ளார்.

மாகாண சபைத் தேர்தல்களில் ஈ. பி. ஆர். எல். எவ்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியரை உடன்விடுவிக்க நீதிமன்றம் உத்தரவு

மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கும் போது பெரியநீலாவணை அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட ஆசிரியர் ஒருவரை உடன் விடுவிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

1990 அக்டோபர் மாதம் கைதுசெய்யப்பட்ட கந்தையா தேவமனோகரன் (வயது 36) என்பவரையே இவ்வாறு விடுதலை செய்யும்படி உயர்நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

இவரது விடுதலை தொடர்பாக உறவினர்கள் தாக்கல் செய்திருந்த ஆட்கொணர்வு மனு மீதான தீர்ப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாகாணசபை தேர்தலுக்கு ஐ. தே. க. பட்டியல் தயார்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கான ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் பட்டியல் நேற்று முன்தினம் பூர்த்தியாக்கப்பட்டு உள்ளது. ஐ. தே. கவின் நியமன சபை நேற்று முன்தினம் கூடியபோது இதற்கான இறுதிப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. எதிர்வரும் 5-ம் திகதி முதல் 7-ம் திகதி வரையான காலத்தில் பதினேழு மாவட்டச் செயலகங்களில் இந்த வேட்பாளர் பட்டியல்கள் தாக்கல் செய்யப்படவுள்ளன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக்கட்சி வேட்பாளரை அனுராவேதெரிவுசெய்வார்?

[கொழும்பு]

மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளரைத் தெரிவுசெய்யும் குழுவிற்கு சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமை வகிக்க மாட்டார் எனத் தெரியவருகிறது.

கோலாலம்பூருக்கு மருத்துவ சிகிச்சைக்காகச் சென்றிருக்கும் சிறிமாவோ, ஏப்ரல் 12 ஆம் திகதி நாடு திரும்ப உள்ளதால், கட்சியின்தேசிய அமைப்பாளரான அனுரா பண்டாரநாயக்கா வேட்பாளர் தெரிவுக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


பயிற்சி வினாத்தாள்
(ஆண்டு 4, 5)

ஆண்டு 4, ஆண்டு 5 புலமைப் பரிசில் முன்னோடி வினாத்தாள் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) ஒவ்வொரு மாதமும் முதலாவது மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (4621)

தேவை

ஜாம் போத்தல்கள், பன்ரா, கொக்கோகோலாவகையிலான 300 மில்லி லீற்றர், 160மில்லி லீற்றர் போத்தல்கள் என்பன எம்மால் நியாய விலையில் கொள்வனவு செய்யப்படும். கரபி, பழரசத்தொழிற்சாலை, கோப்பாய் தெற்கு கோப்பாய். (சி-6322)

கல்வி

GCE (OL ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் 26 வருட அநுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinct on பெறுபேறடையக் கற்பிக்கப்படும் ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை லோகேந்திரா வீதி சுண்டுக்குளி. [4618]


### அநாதை இல்லம் அமைக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருக்கும் அநாதைச் சிறுவர்களின் பராமரிபபுக்கென அநாதைச் சிறுவர் இல்லம் ஒன்று அமைக்கப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மறை மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குனர் அருட்திரு எம். இ பயஸ் அடிகளார் இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இதற்கென அனாதைச் சிறுவர்களை இனம் கண்டு தம்முடன் தொடர்பு கொள்ளும்படி அவர் சகலரையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

### உண்ணாவிரதம் அனுட்டிப்பு

கல்வியங்காடு சந்தியில் உள்ள தியாகச்சுடர் அன்னை பூபதி நினைவுப் பந்தலுக்கு முன்னால் கல்வியங்காடு வர்த்தகர்சளும், கல்வியங்காடு சந்தை வியாபாரிகளும் உண்ணாவிரதம் மேற்கொள்ளவுள்ளனர்.

# தனியான காணிக் கொள்கை மலையகத்திற்கு வேண்டும்

## - டி. வி. சென்னன் பேச்சு

(கொழும்பு)

மலையகத்தின் தோட்டத் தொழிலளர்களுக்கென்று ஒரு காணிக்கொள்கை புதிதாக வகுக்கப்படவேண்டும் என்று பதுளை மாவட்ட எம் பியான டி.வி. சென்னன் பாராளுமன்றத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், மலையகத்தில் இன்றும் பல குடும்பங்கள் நடோடிகளாக தோட்டம் தோட்டமாக சட்டி முட்டி கட்டிக் கொண்டு வீடில்லாமல் காணியில்லாமல் அலைந்து திரிந்து கொண்டு இருக்கின்றனர். அவர்கள் குடிசை கட்டினால் கூட அவர்களுக்கு வேலை மறுத்து சட்டத்தின் மூலமாக அக்குடிசை உடைக்கப்படுகிறது. ஆகவே தான் மலையக பகுதகளில் இனிமேல் காணி பகிர்ந்து கொடுக்கும் போது அங்கு வாழும் மலையக மக்களுக்கு காணிக்கொள்கை வகுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

## அ.தி.மு.க ஆட்சியை விரட்ட தமிழக மக்கள் தயார்

### —முரசொலி மாறன் தெரிவிப்பு

[சென்னை]

ஏமாற்றுவேலைபுரிந்துவிட்ட அ.தி.மு கவினரை ஆட்சியை விட்டு விரட்ட மக்கள் தயாராகிவிட்டனர் என்று முன்னாள் மத்திய அமைச்சரும் தி.மு.க. தலைவர்களில் ஒருவருமான முரசொலிமாறன் தெரிவித்தார்.

தென் சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில் இடம் பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில், இங்கே திரண்டிருக்கிற கூட்டம் தமிழ் நாட்டில் மாற்றம் ஏற்பட்டு இருப்பதைக் காட்டுகின்றது மயங்கியபெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டியது போல ராஜீவ்காந்தி கொலையின் மீது அபாண்டமான பழியைச் சுமத்தி அதிமு.க.காங்கிரஸ் கூட்டு வெற்றி பெற்றது ஆனால் இப்போது அந்த மயக்கம் தெளிந்து விட்டது.

காங்கிரஸ்காரர்களும், அ.திமு கவினரும் மக்கள் அவர்களின் ஏமாற்று வேலைகளையெல்லாம் புரிந்து கொண்டார்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் இனி உங்கள் வேலை பலிக்காது மக்கள் உங்களை ஆட்சிக்கட்டிலில் இருந்து விரட்டியடிக்க தயாராகி விட்டார்கள் என்றும் குறிப்பிட்டார்.

## பயிலுநர் ஆசிரியர் பரீட்சை மே மாதத்தில் நடக்கும்

தொழிற் கல்விக்கான ஆசிரியர் பயிற்சி நெறிகளைக் கற்பதற்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்கான இறுதிப்பரீட்சையின் முதலாம் பகுதி எதிர்வரும் மே மாதம் 7ஆம். 8ஆம் திகதிகளில் நாடுமுழுவதும் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையங்களில் நடத்தப்படும் என்று கொழும்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை இப்போது பாதுகாப்பான இடமாம்

(கொழும்பு)

இலங்கை ஒரு பாதுகாப்பான இடம். இது கொழும்பில் நேற்றுடன் முடிவடைந்த பசுபிக் பிராந்திய இராணுவ அதிகாரிகளின் மாநாட்டின் மூலம் உறுதிப்படுத்தப்படுவதாக தெரிவிக்கபபட்டுள்ளது.

### சிறுவர் பாடசாலை ஆசிரியருக்கான பயிற்சி வகுப்பு ஆரம்பம்

மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையத்தால் வழங்கப்படும், சிறுவர் பாடசாலை ஆசிரியருக்கான பயிற்சி ஆரம்பமாக உள்ளது. பயிற்சி பெற விரும்புவோர், கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

1. சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையம் மூளாய்–சுளிபுரம்.
2. சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சிதுணை நிலையம், 792 ஐயனார் கோவிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
3. சிறுவர் பாடசாலை ஆசிரியர்பயிற்சி துணை நிலையம், மகாத்மா ஒழுங்கை, நெல்லியடி கரவெட்டி,

குறிப்பு:– 05-04-93 இன்று 1½ மாதகால பயிற்சி தொடங்கவுள்ளது.

★ ஏற்கனவே சிறுவர் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களின் வசதிக்கேற்ப

### பாலர் பாடசாலை திறப்புவிழா

(வடமராட்சி)

அ'பன் ராஜன் நகரில் கடந்த முதலாம் திகதி வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆரம்பித்த புதிய பாலர் பாடசாலையை பருத்தித்துறை பிரதேசசபை செயலாளர் திரு. செவ்வந்திநாதர் திறந்து வைத்தார்.

அப்பாலர் பாடசாலையில் கல்வி பயிலவுள்ள பாலர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் திரு. இரா. சிவச்செல்வம் கல்விக்கான உபகரணங்களை அன்பளிப்புச் செய்தார். (யோ)

### தமிழ்த்தின விழா

(தென்மராட்சி)

யா/ கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்தின் தமிழ்த்தின விழா வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.30மணிக்கு வித்தியாலய அரங்கில் அதிபர் திரு.செ.நா. சத்தியநாதன் தலைமையில் நடைபெறும். இதற்கு பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. பொ.வீரபத்திரன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக யாழ் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரீகத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.மா.வேதநாதன், தென்மராட்சி கல்விக் கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு.இ. கணேசன் அவர்களும் கௌரவவிருந்தினராக முன்னைநாள்கொத்தணி அதிபர் திரு. சோ.கணேசலிங்கம்அவர்களும்கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (86)

### 300-ம் நாள் நினைவஞ்சலியும்

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



யுனிசெவ் உதவியுடன்

## போசாக்குணவுத் திட்டம் யாழ்ப்பாணத்தில் அமுலாகும்

### – சரித்த ரத்வத்தை தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் யாழ்ப்ணம். கரவெட்டி, மூளாய் பிரதேச செயலகங்களைச்சேர்ந்த முப்பது கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றில் போஷாக்கு திட்டத்தை செயற்படுத்தும் முகமாக ஜனசக்தி நம்பிக்கை நிதியத்தின் உதவியுடன் யுனிசெவ் நிறுவனம் முயற்சி மேற்கொண்டிருப்பதாக அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் சரிந்த ரத்வத்தை கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேலும் இத் திட்டத்தின் கீழ்கர்ப்பிணிகள், குழந்தைகள், தாய்மார்கள் நன்மை அடைவார்கள் என்றும் குறிப்பிட்டார்.

மாகாணசபைத் தேர்தல்களுக்காக

## வாகன சுவீகரிப்பிற்கு அவசரகால விதி அமுலாகும்

(கொழும்பு)

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் தேவைகளுக்கு பயன்படுத்துவதற்காக வாகனங்களைச் சுவீகரிப்பதற்கு அவசரகால சட்டங்களைப் பயன்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மாகாண சபைகளின் தேர்தல் வேலைகளைக் கவனிப்பதற்காக வாகனங்கள் தேவை என்று தேர்தல் ஆணையாளர் விடுத்த கோரிக்கையை தொடர்ந்து அரசாங்கம் மேற்கண்ட முடிவைஎடுத்துள்ளது.

இத் தீர்மானத்தின்படி தெரிவு அத்தாட்சி உத்தியோகத்தர் தமக்கு தேவையான வாகனங்களை சுவீகரிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


கண்டெடுப்பு

கொக்குவில் பகுதியில் இருந்து கைப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம்காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.


## நினைவு கூருகின்றோம்...

## 1993-04-04

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய

★ ராசன்

1987 ஆம் ஆண்டு கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த.

கனியூட் [அந்தோனி தேவராசா-முதலைக்குத்தி, உயிலங்குளம்-மன்னார்]

1989 ஆம் ஆண்டு மன்னார்-வெள்ளாங்குளம் பாலியாற்றுப் பகுதியில் சிற்றூர்தி ஒன்றினை வழிமடக்கி கொள்ளையில் ஈடுபட்ட தேசவிரோத சக்திகளினால் காட்டுக்குள் அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப் பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச்சூட்டில் எமைப்பிரிந்த

ராஜ்குயின் [யோசப் அன்ரன் பெர்னான்டோ-பனங்கட்டிக்கொட்டு-மன்னார்]

1991 ஆம் ஆண்டு காரைநகரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

2-ம் லெப். இளங்கோ [இராமநாதன் சகாதேவன் -சாம்பல்தீவு-திருமலை]

மன்னார் நானாட்டான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய

லெப். பார்க்குகன் [ஆரோக்கியம் நிக்சன்-நானாட்டான்-மன்னார்]

கொலிடின் [பா.கிட்ணறி பிறேம்ராஜ்-நறுவிலிக்குளம், வங்காலை-மன்னார்]

வர்களின் பராமரிப்புக்கென அநாதைச் சிறுவர் இல்லம் ஒன்று அமைக்கப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மறை மாவட்ட மனித முன்னேற்ற நடு நிலைய இயக்குனர் அருட்திரு எம். இ பயஸ் அடிகளார் இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இதற்கென அனாதைச் சிறுவர்களை இனம் கண்டு தம்முடன் தொடர்பு கொள்ளும்படி அவர் சகலரையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

### உண்ணாவிரதம் அனுட்டிப்பு

கல்வியங்காடு சந்தியில் உள்ள தியாகச்சுடர் அன்னை பூபதி நினைவுப் பந்தலுக்கு முன்னால் கல்வியங்காடு வர்த்தகர்களும், கல்வியங்காடு சந்தை வியாபாரிகளும் உண்ணாவிரதம் மேற்கொள்ளவுள்ளனர். நாளை காலை 8மணி முதல் பிற்பகல் மூன்று மணி வரை நடைபெறவுள்ள இவ் உண்ணாவிரதத்தில் சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளும், பொதுமக்களும், மாணவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (42)


சிறுவர் பாடசாலை ஆசிரியருக்கான

**பயிற்சி வகுப்பு ஆரம்பம்**

மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையத்தால் வழங்கப்படும், சிறுவர் பாடசாலை ஆசிரியருக்கான பயிற்சி ஆரம்பமாக உள்ளது. பயிற்சி பெற விரும்புவோர், கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

1. சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையம் மூளாய்–சுளிபுரம்.
2. சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சிதுணை நிலையம், 792 ஐயனார் கோவிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
3. சிறுவர் பாடசாலை ஆசிரியர்பயிற்சி துணை நிலையம், மகாத்மா ஒழுங்கை, நெல்லியடி கரவெட்டி,

குறிப்பு:– 05-04-93 இன்று 1½ மாதகால பயிற்சி தொடங்கவுள்ளது.

★ ஏற்கனவே சிறுவர் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களின் வசதிக்கேற்ப பாடசாலை விடுதலைக்குள் இரு பகுதிகளாக சித்திரைமாத. ஆவணிமாத விடுதலைக்குள் நடைபெறும்.

மேலதிக விபரங்களை மேற்குறிப்பிட்ட முகவரியில் பெற்றுக் கொள்ளவும்.

**இ. பொன்மலர்**
இயக்குநர்

(4617)



LUXINTENEBRIS

# JAFFNA ENGLISH ACADEMY

## ENGLISH TUTORS-IN-CHARGE

Applications are invited from competent persons of either sex for the above posts. Candidates must be suitably qualified and experienced teachers of English OR must have high competency and aptitude for teaching spoken and written English. The Tutors-In-Charge will work according to the scheme prepared by us and also be responsible for training the students upto the levels specified by us. The selected candidates would be en.itled to remunerations commensurating with their qualifications and experiences.

Formal written applications with complete bio-data may be sent to us for our perusal. No personal intimations will be sent to the interviewees.

**All candidates please call over personally at 10 a.m. on 10-4-93 for an interview.**

Director of Studies.

9, RAKKA LANE,
CHUNDIKULI,
JAFFNA.

(சி-6325)




## லெப். வேந்தன்/கில்மன்

(சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப்பிரிவு)

வேலாயுதபிள்ளை வரதன்

(பளை மகாவித்தியாலய உயர்தரவகுப்பு மாணவன்)

| மண்ணிலே | விடுதலை | மண்ணுக்காய் |
| --- | --- | --- |
| மலர்ந்தது: | வேங்கையானது: | மடிந்தது: |
| 24-11-1970, | 2*-09-1988, | 09-06-1992 |

தம்பி! மண்ணுக்காய் மடிந்த மாவீரனே!
நீ மடிந்த போது இந்த மண் சிவந்தது.
என்றும் உன்நினைவு வரும்போதில் எங்கள் கண்சிவக்குது
உன் மறைவைக்கேட்டு எங்கள் மனம் துடிதுடித்தது
மிகத்துயரத்துடன் முந்நூறு நாட்கள் கடந்தது.

09-06 1992 இல் வீரச்சாவடைந்த எங்கள் அன்புச் செல்வம் செல்வன் வேலாயுதபிள்ளை வரதன் அவர்களின் ஆத்மசாந்திக்காக 04-04-1993 இன்று பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் அதைத்தொடர்ந்து கும்பிழாவளைப் பிள்ளையார் ஆலய திருமடத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

''திருவதிகை''
வேளாவை,
அளவெட்டி.

திரு திருமதி வேலாயுதபிள்ளை

(4619)

கனியூட் [அந்தோனி தேவராசா-முதலைக்குத்தி, உயிலங்குளம்-மன்னார்]

1989 ஆம் ஆண்டு மன்னார்-வெள்ளாங்குளம் பாலியாற்றுப் பகுதியில் சிற்றூர்தி ஒன்றினை வழிமடக்கி கொள்ளையில் ஈடுபட்ட தேசவிரோத சக்திகளினால் காட்டுக்குள் அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச்சூட்டில் எமைப்பிரிந்த

ராஜ்குயின் [யோசப் அன்ரன் பெர்னான்டோ-பனங்கட்டிக்கொட்டு-மன்னார்]

1991 ஆம் ஆண்டு காரைநகரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

2-ம் லெப். இளங்கோ [இராமநாதன் சகாதேவன் -சாம்பல்தீவு-திருமலை]

மன்னார் நானாட்டான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய

லெப். பார்க்குகன் [ஆரோக்கியம் நிக்சன்-நானாட்டான்-மன்னார்]

கொலிடின் [பா.கிட்ணறி பிறேம்ராஜ்-நறுவிலிக்குளம், வங்காலை-மன்னார்]

வவுனியா-தாண்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய

சிறிகாந் [சின்னையா உதயராசா - மாணிக்கவளவு, ஓமந்தை-வவுனியா]

வவுனியா-பம்மைமடுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

கப்டன் ஜியாப்காந்தன் [குமாரசாமி மகேஸ்வரன் -134 புகழேந்திநகர்-மல்லாவி.-துணுக்காய்]

2ம்-லெப் சியாந்தன் [தெய்வேந்திரம் ரவிச்சந்திரன் -சாஸ்திரிகூழாங்குளம்-வவுனியா]

விக்ரர் [அம்பலவாணர் சுரேஸ்குமார்-இறம்பைக்குளம்-வவுனியா]

பாலு [அடைக்கலம் சுந்தரலிங்கம்-கண்டிவீதி, சின்னக்குளம்-வவுனியா]

கிருபன் [சு.சைமன்-பூவரசங்குளம்-வவுனியா]

தாமு [பொன்னையா ஜெயராசா-விளக்குவைத்தகுளம் -வவுனியா]

கபில்தேவ் [முருகேசு சிவபாலன் - சாஸ்திரிகூழாங்குளம்-வவுனியா]

சியாத் [ப. பரமேஸ்வரன்-கோழியாகுளம்-வவுனியா]

முகுந்தன் [சுப்பையா சசிகுமார்-உக்கியான்குளம்-வவுனியா]

தனேந்திரன் [சுப்பையா பன்னீர்ச்செல்வம் - மாத்தளை]

யாழ்-மாவிட்டபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய

தீபன் [சுப்பிரமணியம் சுகந்தகுமார்-வட்டுக்கோட்டை கிழக்கு-யாழ்]

மட்டுநகரில் தேசவிரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட ஆதரவாளர்

பாலசுந்தரம் ரவீந்திரன் [நாவற்குடா-மட்டு]

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவரார்.

**தமிழீழ விருதலைப் புலிகள்**

(சி-6328)

நல்லூர் [illegible] நூலகம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

அரசாங்க அலுவலாளர்களிடம் கொள்ளும் நட்பு மெல்லிய காகிதம் போன்றதாக இருக்கும்.

— சீனப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 04-04-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## அரச அதிகாரிகளும் அறிவிப்புக்களும்

கடந்த மாதம் 24ஆம் திகதி பத்திரிகைச் செய்தி ஒன்று, பேராதனை, பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டப்படிப்பிற்குரிய( கலைமாணி) பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப் படும் எனத் தெரிவித்தது. இச்செய்தி யாழ். அரச அதிபரை மேற்கோள் காட்டி வெளியிடப் பட்டிருந்தது.

ஆனால், திடீரென நேற்றைய பத்திரிகைச் செய்தியொன்று பேராதனை, பல்கலைக் கழகத்தில் பதிவு செய்த மாணவர்களின் பரீட்சைகள் எவையும் இங்கு நடைபெறமாட்டாது. உடனடியாக பரீட்சார்த்திகள் யாவரும் தாம் விண்ணப்பித்த பரீட்சை நிலையங்களுக்கே பரீட்சை எழுதச் செல்லவும் எனத் தெரிவிக்கின்றது. இச் செய்திக் குறிப்பும் யாழ். அரச அதிபரை மேற்கோள் காட்டியே வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 17ஆம் திகதி பத்திரிகைக் குறிப்பொன்று வடமாகாண தபால் அத்தியட்சகர் சேதுகாவலரை மேற்கோள் காட்டி யாழ். குடாநாட்டிற்குரிய தபால்கள் இனித் தாமதம் எதுவுமின்றி உடனுக்குடன் வந்துசேரும் என்பதோடு யாழ். வரும் ஒவ்வொரு கப்பலிலும் தபால் பொதிகள் வந்துசேரும் எனத் தெரிவித்திருந்தது.

ஆனால், கடந்த 17ஆம் திகதி 'வாதுவ' கப்பலில் வந்த தபால்களின் பின்பு கொழும்புத்தபால் எவையும் குடாநாட்டிற்கு வந்து சேரவில்லை. ஆனால், அதன் பின்னர் மூன்று கப்பல்கள் யாழ்ப்பாணம் வந்து சென்றுள்ளன. அதிலும் ஒரு பொதிதபால் கூடவரவில்லை. அத்தோடு வந்து கொண்டிருக்கும் 'குமண' கப்பலிலும் தபால் பொதிகள் ஏற்றப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை.

இதற்கு முக்கியமான காரணம் சிறிலங்கா அரசாங்க அதிகாரிகளின் சொல் ஒன்று செயல் ஒன்று என்ற போக்குத்தான். வடபகுதி அதிகாரிகள் நேரில் சந்திக்கும் போது பிரச்சினைகள் எல்லாவற்றையும் தீர்த்துவிடுவது போலவும், தேவையான யாவும் அனுப்பி வைக்கப்படும் எனவும் வாக்குறுதி அளிப்பதும் பின்னர் அவற்றை நடைமுறைப்படுத்தாமல் விடுவதும், பெரும் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் அவர்களின் வழமையான நடவடிக்கைகளாகும்.

ஆனால், சிங்கள அதிகாரிகளினது இனவாதப்

# தாய்ப்பாலூட்டலும் உப உணவு கொடுத்தலும்

டாக்டர்: சாந்தி

ஒரு குழந்தையின் வளர்ச்சிக்கு மட்டுமல்ல அதன் நோய் எதிர்ப்புசக்தியை கட்டி எழுப்புவதற்கும் தாய்ப்பால் அவசியம். ஆகவே அக்குழந்தை ஆரோக்கியமான நோயற்ற செல்வமாக வளர்வதற்கு பிறந்த நேரத்தில் இருந்து தாய்ப்பாலை ஊட்டத் தொடங்க வேண்டும். தாய்ப்பால் என்று சொல்லும்போது அது குழந்தைக்கான நிறையுணவு அதில் சகலவிதமான சத்துக்களுடன் இரும்புச்சத்து, கனியுப்புக்கள், விற்றமின்கள் ஆகியனவும் அடங்கியுள்ளன. ஆனால் இன்று அபிவிருத்தியடைந்த பலநாடுகளின் குழந்தைகளுக்கு தாய்ப்பாலை ஊட்டும்வீதம் வெகுவாக குறைந்துள்ளது. இதற்குரிய காரணங்களாக:-

1. வேலைக்கு போதல்.
2. தாய்ப்பாலை ஊட்டினால் தமது அழகுகெட்டு விடும் என்ற மூட நம்பிக்கை.
3. புதிய புதிய பால்மாவகைகளின் அறிமுகம் போன்றவற்றை எடுத்துக்கொள்ளலாம்.

மேற்கூறிய காரணங்களை எடுத்துப் பார்க்கையில் நமது சமூகத்தில் இவையினால் எந்தவிதமான பாதிப்புக்களும் ஏற்படவில்லை. ஆனால் இங்கும் தாய்ப்பாலூட்டுவதில் உள்ள அக்கறை குறைந்துள்ளது. இதற்குரிய காரணங்களை ஆராய்ந்து பார்த்த போது எமது மக்களில் பலருக்கு தாய்ப்பால் என்பது குழந்தைகளுக்கு அவசியமான ஒன்று என்று புரிகிறது. ஆனால் அவர்கள் தாய்ப்பால் ஊட்டாமைக்குரிய முக்கியமான காரணம் என்னவெனில் பாலூட்டுவதற்கு போதுமான பால்சுரக்கப்படுவதில்லை என்பதாகும். ஆகவே ஏன் எமது தாய்மார்கள் தம் குழந்தைகளுக்கு தாய்ப்பாலை ஊட்டுவதில்லை என்று ஆராய்ந்து பார்ப்பதைவிட அவர்களுக்கு ஏன் பால் குறைவாக சுரக்கப்படுகின்றது என்பதை ஆராய்ந்து அதனை நிவர்த்தி செய்தல் வேண்டும். இதனால் நாம் தாய்மார்களின் மனக் கவலையை போக்குவதுடன்

மாக கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் கொடுக்கும்உணவில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்ததாக குழந்தை பிறந்தவுடன்பாலூட்டத்தொடங்கினால் அது குழந்தைக்கு வயிற்றோட்டத்தை ஏற்படுத்தும் என்று முன்னோர் சொல்லிவைத்த கதையை நம்பி பல தாய்மார்கள் குழந்தை பிறந்தவுடன் பால் ஊட்டத் தொடங்குவதில்லை.

இதற்கு பதிலாக முதல் சில தினங்களுக்கு கொதித்தாறிய நீர், கற்கண்டு நீர், குளுக்கோஸ் நீர் போன்றவற்றைப் பருக்குகின்றார்கள். இதனால் நாம் அறியாமலே அக் குழந்தையை பட்டினி போடுகின்றோம். இது அதன் ஆரம்ப வளர்ச்சியை பாதிக்கின்றது. இதை விட பல தாய்மார்கள் உடனடியாக பாலூட்டத் தொடங்கியும் பால் சொற்பளவு தான் சுரக்கின்றது. இது குழந்தைக்கு போதுமானதாக இல்லை. இதனால் தான் புட்டிப்பால் கொடுக்கின்றோம் என்கிறார்கள். இதுவும் ஓர் அறியாமையின் வெளிப்பாடு

தான். ஆரம்பத்தில் பால் சுரப்பு குறைவாகத் தான் இருக்கும் ஆனால்தொடர்ந்து குழந்தை வாயை வைத்து உறிஞ்ச உறிஞ்சத் தான் நரம்பு புத்தூண்டலினால் மேலும் பால் கூடுதலாக சுரக்கப்படும். அதுவும் திடீரென கூடுதலாக சுரக்காது. படிப்படியாக கூடிக் கொண்டு வரும். அநேகமாக பால் முழுமையாக, திருப்திகரமாக சுரப்பதற்கு கிட்டத்தட்ட 6 கிழமைகள் எடுக்கும் அதுவரையும் தாய் மனச் சோர்வு அடையாமல் குழந்தைக்கு தேவையென்கின்ற போதெல்லாம் பாலைஊட்ட வேண்டும். இப்படி ஊட்டும் போது ஆரம்பத்தில் 2மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை கொடுக்க வேண்டும். அதுவும் ஒவ்வொரு மார்பகத்திலும் கிட்டத்தட்ட 10 நிமிடங்கள் ஆவது குழந்தையை உறிஞ்ச விட வேண்டும். இவ்வாறு தொடர்ந்து கொடுத்துக் கொண்டு வரும் போது நிச்ச

துக் கொண்டால் மேலும் ஒரு பிரச்சினை. அநேகமான தாய்மார்கள் சில உணவு சூடு. சில உணவு குளிர், சில உணவு கிரந்தி என்று சத்துக்கள் நிறைந்த பல உணவுகளை தமது உணவில் தவிர்க்கிறார்கள். இதுவும் நாம் செய்யும் தவறுகளில் ஒன்று. அப்படி உணவில் சூடு, குளிர், கிரந்தி என்று ஒன்றும் இல்லை. சகல உணவையும் உட்கொள்ள வேண்டும். சில தாய்மார்கள் புட்டிப்பாலை கொடுப்பதினால் தனது குழந்தைசதைப் பிடிப்புள்ளதாக அழகாகவரும் என்ற நம்பிக்கையை மனதில் வைத்திருக்கிறார்கள். இதுமுற்றிலும்தவறானது. புட்டிப்பால் தாய்ப்பாலைப்போல சத்துக்கள் நிறைந்தவையாக இருக்கலாம். ஆனால் தாய்ப்பாலை எடுத்துக்கொண்டால்,

ஒவ்வாமை
செலவீனம், வீண்விரையம் ஏற்படுவதில்லை.

தொற்றுக்களை எதிர்த்துப் போராடும் சக்திஉண்டு. இங்கு தாய்ப்பாலில் காணப்படும் சில பிறபொருள் எதிரிகள் குழந்தைகளுக்கு ஏற்படக் கூடிய சகலவித்மான தொற்றுக்களையும் எதிர்த்துப் போராடி அழிக்கக் கூடியவை.

தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு மலச்சிக்கல் ஏற்படுவதில்லை. குழந்தைக்கு பசியென்றவுடன் தாய்ப் பால் உடனடியாக தாமதம் இன்றிக் கொடுக்கலாம். அத்துடன் தாய்ப்பால் 2—3 மணித்தியாலத்திற்குள் சமித்து விடும். சத்தி எடுக்கும் பிரச்சினை வராது தாய்ப்பால் சுத்தமானது, கிருமிகள் அற்றது ஆகவே தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு வயிற்றோட்டம் வருவது குறைவு. தாய்ப்பால் குழந்தைகளுக்கு ஒரு நிறையுணவு. ஆனால் நாம் புட்டிப் பாலை எடுத்துக்கொண்டால் மேற்கூறிய நன்மைகள் எதுவும் ஏற்படுவதில்லை. அத்துடன் புட்டிப்பால் கொடுப்பதினால் குழந்தைக்கு ஏற்படும் முக்கிய பிரச்சினை என்னவெனில் வயிற்றோட்டம் ஆகும். இங்கு

மூன்று மாதத்திலேயே உப உணவில் சகலதையும் எடுத்தவுடன் கொடுக்கத் தொடங்கக் கூடாது. முதலில் தாய்ப்பாலுடன் சத்துள்ள நீராகாரமான எலுமிச்சம் சாறு, கஞ்சித் தெளிவு, மரக்கறி அவித்த (சூப்) போன்றவற்றையும் கொடுக்க வேண்டும். பின்பு மெதுவாக வாழைப்பழம், பப்பாளிப்பழம், முட்டை மஞ்சற் கரு, மசித்த சோற்றுடன் கீரைக்கறி, அல்லது பருப்புக் கறி, மசித்த உருளைக்கிழங்கு போன்றவற்றில் சிறு சிறு அளவில் ஊட்டத் தொடங்க வேண்டும். இவ் உப உணவுகளை நாம் ஊட்டும்போது ஆரம்பத்தில் குழந்தைகள் உண்ண மறுப்பார்கள். துப்புவார்கள், சிலவேளைகளில் சத்தி கூட எடுப்பார்கள். ஆனால் இது எந்தவொரு உணவை புதிதாகக் கொடுத்தாலும் இருக்கத்தான் செய்யும். ஆகவே தாய்மார்கள் இதை மனதில்கொண்டு சளைக்காமல், விரக்தி அடையாமல் ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சமாக ஊட்டிவரும் போது குழந்தைகள் இவ்உணவின் ருசியை ஏற்று பழக்கப்பட்டு சாப்பிடத் தொடங்குவார்கள்.

இவ்வாறு படிப்படியாக உப உணவூட்டலை கூட்டிக் கொடுத்துக் கொண்டு வரும்போது குழந்தை தமது முதலாவது வயதை அடையும்போது தம் வீட்டிலுள்ள மற்றவர்கள் உண்ணும் உணவில் உறைப்பையும், எண்ணெய்யையும் தவிர மீதி சகலதையும் உண்ணும் பக்குவநிலையை அடைந்து விடும். இங்கு உபஉணவில் உறைப்பையும், எண்ணெய்யையும் தவிர்ப்பது நன்று.

உபஉணவுகளைக் கொடுக்கத் தொடங்கியவுடன் தாய்ப்பாலூட்டலை நிறுத்தக் கூடாது. தொடர்ந்து அதை எவ்வளவு காலத்திற்கு ஊட்ட முடியுமோ அவ்வளவு காலத்திற்கு ஊட்ட வேண்டும்.

இறுதியாக எமது தாய்மார்கள் தாம் கருவுற்ற காலத்தில் இருந்தே தம்மை தாய்ப்பாலூட்டலுக்குத் தயார் செய்வதோடு மட்டுமல்லாமல் குழந்தைகள் பிறந்ததும் உடனடியாகத் தாய்ப் பாலூட்டலை ஆரம்பித்து 3-ம் மாதத்தில் இருந்து உபஉணவு ஊட்டலையும் ஆரம்பித்தால் நிச்சயமாக நோய் அற்ற, ஆரோக்கியமான உடல் உள வளர்ச்சி நிரம்பிய சிறுவர்கள் எம் மண்ணில் உலா வருவார்கள்.

## அறத்தின் ஒரு வடிவோ?

புயலுக்குத்
தென்றலுக்குப்
பூபதியும் பேராமோ?
அன்னை இவள்தானே
அறத்தின் ஒரு
வடிவோ?

''காவலர் நாம்
என்று வந்து
கன்னமிட்ட
இந்தியனே!
பாவங்கள்
எத்தனையோ
அத்தனையும்
பண்ணிவிட்டாய்!

அங்காடி யா? அன்றி,
ஆரும் வரப்போகச்
செங்கண் விலைமாதர்
சேரியா ஈழமிது?

ஏப்பமிட வந்தாய் நீ
எங்களது
மண்ணைத்தான்
கூப்பிட்டா வந்தாய்?
கொடியவனே
கொள்ளிவைக்க!

என்ன உரிமையிலே
இந்த மண்ணில்
கால்வைத்தாய்?''
என்றிங்(கு) அடடா!
எரிமலையாய்
ஆகிவிட்டாள்!

உண்மை அறம்
தோற்ற
வரலா (று)
உலகிலில்லை!
''காந்தியம்''
பாரதத்தில்
கைதவறிப்
போனதுவே!

புத்தர் பிறந்த மண்
புன்முளைத்துப்
போனதப்பா
நேருமர பாரும்
முகவரியைத்
தாம் தொலைத்தார்!

பண்டைமனு,
வான்மீகி,
பாரதவி யாசரும்
கண்டறிய ஒண்ணாதே
காணாமல்
போனார்கள்!

எந்த அறிஞரும்
ஏதிலியர் ஆனார்கள்;
இந்தியஅர சாள
இனிப்பெரியார்
தோன்றாரே!

வல்லாண்மைப்
பேய்க்கு
வயிற்றுவலி
கண்டதம்மா!
எல்லாரும்

ஆனால், கடந்த 17ஆம் திகதி 'வாதுவ' கப்பலில் வந்த தபால்களின் பின்பு கொழும்புத்தபால் எவையும் குடாநாட்டிற்கு வந்து சேரவில்லை. ஆனால், அதன் பின்னர் மூன்று கப்பல்கள் யாழ்ப்பாணம் வந்து சென்றுள்ளன. அதிலும் ஒரு பொதிதபால் கூடவரவில்லை. அத்தோடு வந்து கொண்டிருக்கும் 'குமண' கப்பலிலும் தபால் பொதிகள் ஏற்றப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை.

இதற்கு முக்கியமான காரணம் சிறிலங்கா அரசாங்க அதிகாரிகளின் சொல் ஒன்று செயல் ஒன்று என்ற போக்குத்தான். வடபகுதி அதிகாரிகள் நேரில் சந்திக்கும் போது பிரச்சினைகள் எல்லாவற்றையும் தீர்த்துவிடுவது போலவும், தேவையான யாவும் அனுப்பி வைக்கப்படும் எனவும் வாக்குறுதி அளிப்பதும் பின்னர் அவற்றை நடைமுறைப்படுத்தாமல் விடுவதும், பெரும் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் அவர்களின் வழமையான நடவடிக்கைகளாகும்.

ஆனால், சிங்கள அதிகாரிகளினது இனவாதப் போக்கும், மோசடிகளும் யாழ்ப்பாணத்தில் உள்ள அரச உயர் அதிகாரிகளுக்குத் தெரியாத ஒன்றல்ல. ஆகையினால், அவைகுறித்து எவரும் அரச அதிகாரிக்கு எடுத்துக் கூறவேண்டிய அவசியமும் இல்லை. இந்நிலையில் அரச அதிகாரிகள் தாம் வெளியிடும் தகவல்கள் குறித்து மிகவும் கவனமாகவும், அக்கறையாகவும் இருத்தல் அவசியமாகும்.

எடுத்துக்காட்டாக ஏற்கனவே குறிப்பிட்டுள்ள பரீட்சை விவகாரமும், கடித விவகாரமும் மக்களுக்கு பெரிய குழப்பத்தையும் கஷ்டத்தையும் ஏற்படுத்தியுள்ளன. தற்போதைய சூழ் நிலையில் வடக்கில் இருந்து தெற்கிற்குப் பயணம் மேற்கொள்வது என்பது பெரிதும் சிரமமிக்கது. இது ஆபத்து நிறைந்ததும், பல தினங்கள் சிலவேளை வாரக்கணக்கில் தாமதம் ஏற்படுத்தும் ஒரு பயணமாகும். இந்நிலையில் திடீரென ஓர் அறிக்கையை விடுவதும், பின்னர் மறுப்புத் தெரிவிப்பதும் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்துவதோடு நெருக்கடிகளை உண்டாக்கக் கூடியவை என்பதிலும் சந்தேகப்பட ஏதுமில்லை.

ஆனால், இதற்குச் சிங்கள அதிகாரிகளோ முழுப் பொறுப்பு எனவும், பத்திரிகைகள் செய்திகளைத் திரிபு படுத்துவதாகவோ, யாழ்ப்பாணத்திலுள்ள அதிகாரிகள் முற்றாக தட்டிக்கழித்து விடமுடியாது. அவர்களின் தவறும் இதில் உண்டு. அவர்கள் கொழும்பிலுள்ள அதிகாரிகள் 'கொள்கை' அளவில் சம்மதம் தெரிவித்திருக்கும் விடயங்களை முடிந்த முடிவாக அறிவித்துவிடுகின்றமையே இதற்கு முக்கியமான காரணமாகும்.

இதனால், அதிகாரிகள் தமது சாதனைப் பட்டியல் நீண்டு கொண்டு போவதாக எண்ணலாம். ஆனால் இதன் விளைவு அதிகாரிகள் மீதான நம்பிக்கையை மக்கள் இழந்து விடுவதற்கே வழி வகுக்கும்.

இந்நிலையில், அதிகாரிகள் தாம் வெளியிடும் தகவல்கள் பெருமளவு மக்களுடன் தொடர்புபட்டிருப்பதால், அவைகுறித்து அவதானமாக இருக்கவேண்டியது அவசியமாகும் அல்லது தாம் வெளியிட்ட தகவல்களை நிறைவேற்றி வைக்க கொழும்பிலுள்ள அரச அதிகாரிகளுடன் போராடத்தயாராக வேண்டும். இதற்காக, பத்திரிகைகளுக்கு செய்தியே வழங்குவதில்லை என்றும், மக்களின் நெருக்கடிகளை கவனத்திற் கொள்ளாமல் விடுதல் எனவும் அரச அதிகாரிகள் தீர்மானமொன்றை எடுப்பார்களே ஆனால், அது மக்களுடனான அவர்களின் தொடர்பைத் துண்டிப்பதாகவும், தமது கடமையில் இருந்து நழுவிச் செல்வதாகவுமே முடியும்.

உள்ள அக்கறை குறைந்துள்ளது. இதற்குரிய காரணங்களை ஆராய்ந்து பார்த்த போது எமது மக்களில் பலருக்கு தாய்ப்பால் என்பது குழந்தைகளுக்கு அவசியமான ஒன்று என்று புரிகிறது. ஆனால் அவர்கள் தாய்ப்பால் ஊட்டாமைக்குரிய முக்கியமான காரணம் என்னவெனில் பாலூட்டுவதற்கு போதுமான பால்சுரக்கப்படுவதில்லை என்பதாகும். ஆகவே ஏன் எமது தாய்மார்கள் தம் குழந்தைகளுக்கு தாய்ப்பாலை ஊட்டுவதில்லை என்று ஆராய்ந்து பார்ப்பதைவிட அவர்களுக்கு ஏன் பால் குறைவாக சுரக்கப்படுகின்றது என்பதை ஆராய்ந்து அதனை நிவர்த்தி செய்தல் வேண்டும். இதனால் நாம் தாய்மார்களின் மனக் கவலையை போக்குவதுடன் குழந்தையின் நோயற்ற ஆரோக்கியமான வளர்ச்சிக்கு வழி ஏற்படுத்த முடியும்.

இங்கு தாய்ப்பால் போதிய ளவு சுரக்காமைக்குரிய காரணங்கள் பல. அவற்றுள் முதலாவதாக ஒரு தாய் கர்ப்பவதியாக இருக்கும் காலத்தில் சரியான முறையில் சத்துள்ள உணவுவகைகளை சாப்பிடாமல் விடுவதினால் அவர் போசாக்கின்மையால் பாதிக்கப்படுகின்றார். இதனால் கருப்பையில் வளரும் குழந்தையின் வளர்ச்சி பாதிப்படைவதுடன் அதற்கு தேவையான பாலும் உற்பத்தி செய்யப்படுவதில்லை. எமது தாய்மார்கள் கர்ப்பவதியாகஇருக்கும் காலத்தில்சத்துள்ள உணவுகளையும், சத்துள்ள குளிசைகளையும் சாப்பிட்டால்தான் மார்பகங்கள் பாலைச் சுரப்பதற்கு தம்மை தயார்படுத்தும். அத்துடன் அக்காலங்களில் அவர்களுக்காக நடத்தப்படும் சிகிச்சை நிலையங்களில் தாய்ப்பாலூட்டலின் முக்கியத்துவத்தையும் எப்படி அதற்கு மார்பகத்தை தயார்ப்படுத்த வேண்டும், எவ்வாறு கவனம் செலுத்த வேண்டும் என்பதைப்பற்றிய விளக்க அறிவுரைகளை சுகாதார தொடர்கள் எடுத்துரைக்க வேண்டும். அத்துடன் எமது தாய்மார்கள் பலர் வீட்டில் கணவன், பிள்ளைகள் யாவரும் சாப்பிட்டபின்பு கடைசியாக சாப்பிடும் வழக்கத்தை கொண்டிருப்பதாலும் அநேகமான சந்தர்ப்பங்களில் சோறும், சொதியும் அல்லது அரைவயிற்றுச் சாப்பாடுமே சாப்பிடுகிறார்கள். இதனால் கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய்மார்களுக்கு போசாக்கின்மை ஏற்பட்டு பால் சுரக்கும் வீதமும் குறைகின்றது. ஆகவே நாம் இவ் வழக்கத்தை மாற்றி வீட்டில் அனைவருக்கும் கிடைக்கும் உணவிலும் பார்க்க முக்கிய

உறிஞ்ச உறிஞ்சத் தான் நரம்புத்தூண்டலினால் மேலும் பால் கூடுதலாக சுரக்கப்படும். அதுவும் திடீரென கூடுதலாக சுரக்காது. படிப்படியாக கூடிக் கொண்டு வரும். அநேகமாக பால் முழுமையாக, திருப்திகரமாக சுரப்பதற்கு கிட்டத்தட்ட 6 கிழமைகள் எடுக்கும் அதுவரையும் தாய் மனச் சோர்வு அடையாமல் குழந்தைக்கு தேவையென்கின்ற போதெல்லாம் பாலைஊட்ட வேண்டும். இப்படி ஊட்டும் போது ஆரம்பத்தில் 2மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை கொடுக்க வேண்டும். அதுவும் ஒவ்வொரு மார்பகத்திலும் கிட்டத்தட்ட 10 நிமிடங்கள் ஆவது குழந்தையை உறிஞ்ச விட வேண்டும். இவ்வாறு தொடர்ந்து கொடுத்துக் கொண்டு வரும் போது நிச்சயமாக பால் கூடுதலாக சுரக்கும். பால் குறைவாக சுரப்பதற்கு மற்றுமொரு முக்கிய காரணம் பிள்ளையைப் பெற்றவர் தேவையானஅளவு நீரை அருந்தாமையாகும் நீர் அருந்தினால் வயிறுவைக்கும் என்ற நம்பிக்கையில் வாழும் எமது தாய்மார்கள் நீரை அருந்துவதில்லை. இதை விட கருப்பையில் ஏற்பட்ட புண்ணை காய்ச்சுவதற்கு என்று சரக்கில் காயம் செய்துகுடிக்க கொடுக்கிறார்கள். இதில்தவறுஇல்லை ஆனால் காயத்தை குடிக்க கொடுத்த பின்பு நீர் அருந்தக் கொடுப்பதில்லை. ஏன் என்றால் காயமும் நீரும் ஒன்றாக சேர்ந்தால் வயிற்றோட்டம் வரலாம் என்ற பயம். இதன் காரணமாக உடலில் நீரின் அளவு குறைந்து பால் சுரப்பு குறைகின்றது. ஆகவே இதை தாய்மார்கள் உணர்ந்து பிள்ளைபெற்று இருக்கும் காலத்தில் காயத்தையும் அளவுடன் சாப்பிட்டு அதற்கு மேலாக அதிகளவில் கொதித்தாறிய நீர் அருந்த வேண்டும். ஒரு தாயின் மனதில் ஏற்படும் விரக்தி, கவலை, மனக்குழப்பம் போன்றவையும் பால்சுரப்பதை பாதிக்கும். இதை தவிர்ப்பதற்கு வீட்டிலுள்ள அங்கத்தவர்கள் குறிப்பாக கணவன் அத்தாயின் உடல் ஓய்வில் கவனம் செலுத்தும் அதே நேரத்தில் உள ஓய்வையும் ஏற்படுத்தக்கூடிய விதத்தில் சூழ்நிலைகளை அமைத்துக்கொடுக்க வேண்டும். அத்துடன் கர்ப்பவதியாக இருக்கும் காலத்தில் மட்டும் உணவில் கவனம் செலுத்தினால் மட்டும் போதாது. குழந்தை பிறந்த பின்பும் தொடர்ந்து அத்தாய் தனது உணவில் அதிகளவு கவனம் செலுத்தினால் தான் பால் சுரக்கும் அளவு போதியளவில் தொடர்ந்து இருக்கும்.

இங்கு பாலூட்டும் தாய்மார்களின் உணவினை எடுத்

தைகளுக்கு மலச்சிக்கல் ஏற்படுவதில்லை. குழந்தைக்கு பசியென்றவுடன் தாய்ப் பால் உடனடியாக தாமதம் இன்றிக் கொடுக்கலாம். அத்துடன் தாய்ப்பால் 2—3 மணித்தியாலத்திற்குள் சமித்துவிடும். சத்தி எடுக்கும் பிரச்சினை வராது தாய்ப்பால் சுத்தமானது, கிருமிகள் அற்றது ஆகவே தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு வயிற்றோட்டம் வருவது குறைவு. தாய்ப்பால் குழந்தைகளுக்கு ஒரு நிறையுணவு. ஆனால் நாம் புட்டிப் பாலை எடுத்துக்கொண்டால் மேற்கூறிய நன்மைகள் எதுவும் ஏற்படுவதில்லை. அத்துடன் புட்டிப்பால் கொடுப்பதினால் குழந்தைக்கு ஏற்படும் முக்கிய பிரச்சினை என்னவெனில் வயிற்றோட்டம் ஆகும். இங்கு தாய்மார்கள் சரியான முறையில் பால்போத்தல்களை கழுவாமல். தொற்று நீக்காமல் பாவிப்பதனாலும், சரியானளவில் மாவைப்போடாமல் அதிகளவு நீரைவிட்டு கரைப்பதினாலும் வயிற்றோட்டம் ஏற்படுகின்றது. ஒரு தாய்தன் குழந்தைக்கு தாய்ப்பாலூட்டும்போது மேற்கூறிய பலவகையான நன்மைகள் ஏற்படுவதுடன் தாய் சேய்க்கும் இடையில் ஓர்பாசமும் உளரீதியான பாசப்பிணைப்பும் ஏற்படுவதை பாலூட்டும் போது நன்றாக அவதானித்தல் புலப்படும்.

ஒரு குழந்தைக்கு, போதுமான அளவில் தாய்ப்பால் சுரந்தாலும் அக்குழந்தை வளர்ந்து கொண்டு வரும் வேளையில் 6 மாதத்திற்கு பின்பு அதன் வளர்ச்சிக்கு தேவையான சத்துக்களையும் கனியுப்புக்களையும் போதியளவில் கொடுப்பதற்கு தாய்ப் பால் தனிய காணாது. ஆகவே இதை சகல தாய்மார்களும் உணர வேண்டும். எமக்கு போதியளவு பால் சுரக்கிறது தானே வேறு உணவு கொடுக்கத் தேவையில்லை. என்ற மனப்பாங்கைமாற்றவேண்டும் தாய்ப்பாலூட்டல் இலகுவில் சமிக்கக்கூடிய சத்து நிறைந்த உப உணவுகளை கொடுக்க வேண்டும் ஆனால் குழந்தைகள் அதுவும் தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகள் வேறு எந்த உணவையும் முதலில் சாப்பிட மறுப்பார்கள். ஆகவே நாம் படிப்படியாக, மெதுமெதுவாக உப உணவுகளைப் பிள்ளைக்கு பழக்குவதற்கு இவ் உணவூட்டலை 3-ம் மாதத்தில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும். அப்போது தான் 6-ம் மாதமளவில் இக் குழந்தைகள் உப உணவை மனம் விரும்பிச் சாப்பிடக் கூடிய மனப் பக்குவத்தினை அடைவார்கள். ஆனால் இதற்கு

எத்தனையோ
அத்தனையும்
பண்ணிவிட்டாய்!

அங்காடி யா? அன்றி,
ஆரும் வரப்போகச்
செங்கண் விலைமாதர்
சேரியா ஈழமிது?

ஏப்பமிட வந்தாய் நீ
எங்களது
மண்ணைத்தான்
கூப்பிட்டா வந்தாய்?
கொடியவனே
கொள்ளிவைக்க!

என்ன உரிமையிலே
இந்த மண்ணில்
கால்வைத்தாய்?''
என்றிங்(கு) அடடா!
எரிமலையாய்
ஆகிவிட்டாள்!

நீரோடை ஒன்று
நெருப்பாறாய்
ஓடுதல் போல்
பார்மடந்தை
தன்பொறையாம்
பான்மை இழந்தாற்
போல்

ஒருதிங்கள் ஆக
விங் (கு)
உண்ணாமற் செய்த
அருந்தவத்தில்
தன்னை
அவியாய்ச்
சொரிந்தாளே!

தாயின் உயிர் மூச்சில்
தமிழீழம் சூடாக
பாயிற் கிடந்தோர்
பதறி எழுந்தார்கள்;

குந்தி இருந்தோர்
குமுறிஎழ இங்குவந்து
மந்திபோல்
நின்றோர்
மரமேறிப்
பாய்ந்தார்கள்!

நேருமர பாரும்
முகவரியைத்
தாம் தொலைத்தார்!

பண்டைமனு,
வான்மீகி,
பாரதவி யாசரும்
கண்டறிய ஒண்ணாதே
காணாமல்
போனார்கள்!

எந்த அறிஞரும்
ஏதிலியர் ஆனார்கள்;
இந்தியஅர சாள
இனிப்பெரியார்
தோன்றாரே!

வல்லாண்மைப்
பேய்க்கு
வயிற்றுவலி
கண்டதம்மா!
எல்லாரும்
கையெடுக்க
ஈழத்தைக்
காத்தவளே!

கண்ணகியாள்
மாமதுரை
சுட்டதொரு
கட்டுரைபோல்
பெண்ணரசி
வல்லரசைப்
பிய்த்தெறிந்தாய்;
மெய்யிதுவாம்!

மக்கள் புரட்சியின்
மூலப் பொறியாக
திக்கெல்லாம்
போற்றத்
திலீபனும் பூபதியும்
வாழி! அறம்வாழி!
வாழ்க புலிவீரர்!
பீழை விலகிப்
பிரபா கரன்வாழி!
ஈழமிது வாழி இனிது!

★ ★

—வீ. பரந்தாமன்

நீதிமன்றத் தீர்ப்பு வரும்வரை

## கொள்கை முடிவு எதையும் தமிழக அரசு எடுக்கக் கூடாது

(சென்னை)

தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா சட்டப்பேரவை உறுப்பினர் பதவியை இழக்கத் தக்க மனு மீதான நீதிமன்றத் தீர்ப்பு வெளியிடப் படும்வரை முதலமைச்சரோ, தமிழக அரசோ கொள்கைமுடிவு எதையும் எடுக்கக் கூடாது என்றும், அதனைத் தமிழக ஆளுநர் கண்காணித்துக்கொள்ளவேண்டும் என்றும் தமிழக நல்லாட்சி இயக்கத்தினர் ஆளுநரிடம் கோரியுள்ளனர்.

## பரிதி இளம்வழுதி சஸ்பெண்ட் கருணாநிதி கண்டனம்

தி. மு. க. சட்டப்பேரவை உறுப்பினரான பரிதி இளம் வழுதியை நடப்புக் கூட்டத் தொடர் முழுமைக்கும் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருப்பதைக் கண்டித்து தி. மு. க தலைவர் மு. கருணாநிதி குடியரசுத் தலைவருக்கும், பிரதமர் நரசிம்மராவுக்கும் தந்தி கொடுத்துள்ளார். அத் தந்தியில், பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையாவின் இச் செயல் நியாயமற்றது என்றும் கருணாநிதி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஈழநாதம்

# சட்டத்தரணிகள் பற்றிய புகார்கள் அதிகரிப்பு

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

''சட்டத்தரணிகள் பற்றிய புகார்கள் தற்பொழுது அடிக்கடி கிடைத்து வருகின்றது. இதைத்தொடர்ந்து சட்டத்துறை சார்ந்தவர்களின் தொழில் தராதரம் வீழ்ச்சியடைந்துள்ளது. சட்டத்தரணிகள் தொடர்பாக வரும் புகார்களை விசாரிப்பதிலேயே நீதிமன்றத்தில் அதிகளவு நேரத்தை செலவிடவேண்டியதாகவுள்ளது''. இவ்வாறு பிரதம நீதியரசர். ஜி. பி. டி. சில்வா கவலை தெரிவித்துள்ளார்.

சட்டத்துறை சுதந்திர உணர்வுடன் செயற்படும் துறை. பொதுவாழ்வின் பல்வேறுபகுதிகளிலும் முக்கிய பங்களிப்பைச் செலுத்தி ஒரு கௌரவமான இடத்தில் சட்டத்துறை உள்ளது. ஆனால் தற்போது எல்லாரும் இத்தொழிலில் சிறப்பாக இல்லை என்றும் சுட்டிக்காட்டப்படும் சம்பவங்கள் பல நிகழ்ந்து வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

## தென்மராட்சி பாடசாலையில் வெண்கட்டி தட்டுப்பாடு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியிலுள்ள சகல பாடசாலைகளிலும் வெண்கட்டிக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்படுவதாக் தெரிவிக்கப்படுகிறது.

அதிகவிலை கொடுத்தும் தனியார் கடைகளில் கூட கொள்வனவு செய்யமுடியாத நிலையில் இது ஒரு பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது.

வெண்கட்டிகூட இன்றி கற்பித்தலில் எவ்வாறு ஈடுபடுவதென ஆசிரியர்கள் அங்கலாய்க்கின்றனர். (86)

## வடமராட்சியில் 82 குடிசை அகதிகளிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினால் வடமராட்சியில் மாமுனைப் பகுதியில் அமைக்கப்பட்ட சுமார் 82 குடிசைகள் இடம் பெயர்ந்த அகதிகளுக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

மேற்படி அகதிகள் ஆழியவளை எனும் இடத்திலிருந்து சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்தவர்கள் என தெரியவருகின்றது.

நேற்று நடைபெற்ற மேற்படி குடிசைகள் கையளிப்பு வைபவத்தில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தலைவர், உபதலைவர் மற்றும் திட்டப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

[பா],[நி]

## 2000 குடும்பங்களிற்கு பாத்திரம் வழங்க முடிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் இடம்பெயர்ந்த சுமார் இரண்டாயிரம் அகதிகள்குடும்பங்களிற்கு சமையல் பாத்திரங்களை வழங்க முடிவு செய்திருக்கின்றது.

மேற்படி சமையல் பாத்திரங்கள்நேற்று மாலை கொழும்பில் இருந்து 'குமண' கப்பல் மூலம் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளது என தெரியவருகின்றது.

மேலும் இச் சமையல் பாத்திரங்கள் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பில் இயங்கி வருகின்ற முகாம்களில் உள்ள குடும்பங்களிற்கும், ஏனைய முகாம்களில் உள்ள குடும்பங்களிற்கும், மற்றும் முகாம்களில் இல்லாமல் வேறு இடங்களில்தங்கியிருக்கும் குடும்பங்களிற்கும் வழங்க முடிவு செய்திருப்பதாக தெரியவருகின்றது.

[பா], [நி]

## 1000 வருடத்திற்கு முந்திய

### பூரத்திருவிழா

தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இன்று பூரத்திருவிழா வழமை போல் சிறப்பாக நடைபெறவுள்ளது. அம்பாளுக்கு விசேட அபிஷேகமும், பூசை ஆராதனை வழிபாட்டினைத் தொடர்ந்து சுவாமி வீதி உலா வருதலும் இடம்பெறும். [41]

### கருத்தரங்கு

சுழிபுரம் பொதுச் சுகாதாரப்பகுதியினரால் போசாக்குக் கருத்தரங்கு ஒன்று நடாத்தப்படவுள்ளது.

மேற்படி கருத்தரங்கு எதிர்வரும் ஏழாம் திகதி காலை 9-00 மணியளவில் தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தில் நடைபெறும். இக் கருத்தரங்கில் பாடசாலை முன்னிலைப் பிள்ளைகளுக்கான போசாக்கும், கீரை வகைகளினால் சத்துணவும் என்ற தலைப்பில் தொல்புரம் மத்தி குடும்பநலசேவையாளர் உரை

## தொழிலாளர் சாதனை

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்குதுறைக்கு 'நில்கிரி' கப்பலில் வந்த மண்ணெண்ணெய் நேற்றுடன்இறக்கப்பட்டு முடிவடைந்தது.

முதல்நாள் 816 பரல்கள் இறக்கப்பட்டன. மீதியானவை நேற்று இறக்கிமுடிவடைந்தது.

போதிய வசதிகள் இல்லாத இந்த இறங்குதுறையிலிருந்து தொழிலாளர்கள் துரிதமாக இறக்கி சாதனை படைத்துள்ளனர். (யோ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு; 76 இலட்சம் ரூபா மோசடி

## பிக்குகள், பாடகி தொடர்பு

(கொழும்பு)

ஜப்பான் நாட்டில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி அப்பாவிகளிடமிருந்து இது வரை சுமார் 76 லட்சம் ரூபாவைப் பெற்றுக் கொண்ட குழுவொன்றின் மோசடியை இரகசியப் பொலிசார் கண்டு பிடித்துள்ளனர்.

இரு பௌத்த பிக்குகள் உட்பட பாடகி ஒருவரும், வர்த்தகர் ஒருவரும், குருடர் ஒருவரும் அங்கம் வகிக்கும் இம் மோசடிக் குழுவினர் பல இளைஞர்களிடம் ஜப்பானில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி இம் மோசடியைச் செய்துள்ளனர்.

பணம் செலுத்திய பல இளைஞர்கள் பாங்கொக்கிலும், சிங்கப்பூரிலும், மணிலாவிலும் நிர்க்கதி நிலைக்குட்பட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

சீதுவையைச் சேர்ந்த குருடர் ஒருவரும் மற்றுமொருவரும் சேர்ந்து சுமார் 22 இளைஞர்களிடமிருந்து 42 லட்சம் ரூபா பணப் பெற்றுள்ளனர். பாடகி ஒருவரும், பிக்கு ஒருவரும் இணைந்து தெஹிவளையில் உள்ள வீடொன்றில் வைத்து 6 பேரிடமிருந்து சுமார் 15 லட்சம் ரூபாவைப் பெற்றுள்ளனர்.

இவ்வாறு பெற்றுக் கொள்ளும் பணத்தின் ஒரு பகுதி பாங்கொக் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. மேற்படி மோசடி குறித்து இரகசியப் பொலிசார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகிறது.

## மக்களின் குறைகளைக் கூற அ. தி. மு. கவினர் தடை

### வாழப்பாடி குற்றச்சாட்டு

(தமிழ்நாடு)

தமிழ்நாடு சட்டப் பேரவையை ஜனநாயக ரீதியில் செயற்படவைப்பதற்காகவே இந்திரா காங்கிரஸ்கட்சி போராடி வருவதாக தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்று சென்னையில் செய்தியாளரிடையே பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து அவர் கூறுகையில்; அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நேற்று தமிழக சட்டபேரவையில் எதிர்க்கட்சிகள் கருத்துத் தெரிவிக்கவிடாமல் செய்ததாகவும், மக்களின் பிரச்சினைகள் குறித்த விடயங்களைக் கூட அவையில் எடுத்துச் சொல்லவிடாமல் செய்ததாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

மாநிலத்தில் மத சார்பற்ற கட்சிகள் எல்லாம் ஒருங்கிணைந்து வகுப்புவாத சக்திகளை எதிர்த்து போராட முன்வருமாறும், இதற்கு தி. மு. கழக அல்லது வேறு எந்தக் கட்சிகளுடனும் கூட்டு வைத்துக்கொள்ள விரும்புவதாக அர்த்தமாகாது எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் தமிழ்நாடு அரசாங்கத்திற்எதிராக தகவல் தொடர்பு சாதனங்கள் செயற்பட்டு வருவதாக தமிழ்நாடு முதலமைச்சர் குற்றம் சாட்டியிருப்பதையிட்டும் அவர் குறை கூறினார். ஜெயலலிதாவின் சட்டப் பேரவை உறுப்பினர் பதவி குறித்த மனுஒன்றும் தேர்தல் கமிஷனின் பரிசீலனையில் இருப்பதால் தார்மீக அடிப்படையில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா பதவி விலகவேண்டும் என சட்டப் பேரவை இந்திரா காங்கிரஸ் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் வெளியிட்ட கருத்தை தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் ஆமோதித்ததாகவும் அவர் தெரிவீத்தார்.

## கம்பன் விழா - 1993 3ஆம் நாள் நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கம்பன் விழாவின் மூன்றாவது நாளான இன்று காலை 9 30 மணிக்கு பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

மாலை 4-30 மணிக்கு மங்கள இசையுடன் ஆரம்பமாகும் நிகழ்ச்சிகளில் தூதுக் கவியரங்கம் சிறப்பு நிகழ்ச்சியாக இடம் பெறவுள்ளது.

## மு.கா.விலிருந்து விலகியோர் ஐ.தே.க.பட்டியலில் நியமனம்

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பலர் அக்கட்சியிலிருந்து விலகி ஐ தே. கவில் இணைந்து மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனாப் சுபைர் ஏ. காதர், அல்ஹாஜ் அன்னிஷெரீப், அல்ஹாஜ் அன்வர்ஹமீத், களுத்துறை அல்ஹாஜ்நசீர், அல்ஹாஜ் எம். ஏ. இந்தியாஸ், அல்ஹாஜ் சித்திக் ஆகியோர் இவ்வாறு ஐ தே. கவின் நியமனம் பெற்ற சில முக்கியத்தர்களாவர்.

## தமிழர் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு காணப்படும் வரை சுபீட்சம் ஏற்படமாட்டாது

### -ரொனி டி மெல்

(கொழும்பு)

''இனப்பிரச்சினைக்குத் தீர்க்கமானதும் தமிழ்மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமானதீர்வு காணப்படும்வரை இந்நாட்டில் சுபீட்சம் என்ற பேச்சுக்கேஇடமில்லை. இனப்பிரச்சினை இந்நாட்டில் இருக்கும் வரை இங்கு அபிவிருத்தியும், பொருளாதார வளர்ச்சியும் ஏற்படாது. எனவே அரசியல் கட்சிகள் சமாதானத்திற்கான வழிமுறைகளை மேற்கொண்டு நாட்டின் எதிர்

தாரப் பிரச்சினைக்கு முடிவு காணமுடியும். இதனைச் சீர்தூக்கிப் பார்த்து நாட்டின் மீதும் மக்கள்மீதும் அக்கறை உள்ளவர்கள் என்றால் அரசியல்வாதிகள் சமாதானப் பேச்சுக்கு வழிசமைக்க வேண்டும்.

வரட்டுக்கௌரவமும். ஸ்திரமற்ற அரசியல் கொள்கையும் நாட்டிற்கு நன்மைதரப்போவதில்லை. இதனை ஒவ்வொரு அரசியல்வாதியும்உணர வேண்டும் அல்லது மக்கள் உணர வைக்கவேண்டும்'' என்றார்.

### பங்குனி உத்தரம்

(குருநகர்)

நாகேஸ்வரம், அளவெட்டி தெற்கு சிறிநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் பங்குனி உத்தரவிழா நாளை திங்கட்கிழமை சிறப்பாக நடைபெறுமென தெரிவிக்கப்படுகிறது. (21)

# மாகாணசபைத் தேர்தல்

ளன.

மேற்படி அகதிகள் ஆழிய வளை எனும் இடத்திலிருந்து சிறிலங்கா இராணுவ நடவடிக்

தலைவர் மற்றும் திட்டப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

[பா],[நி]

போல் சிறப்பாக நடைபெற வுள்ளது. அம்பாளுக்கு விசேட அபிஷேகமும், பூசை ஆராதனை வழிபாட்டினைத் தொடர்ந்து சுவாமி வீதி உலா வருதலும் இடம்பெறும்.

[41]

அல்ஹாஜ் அன்னிஷெரீப், அல்ஹாஜ் அன்வர்ஹமீத், களுத்துறை அல்ஹாஜ்நசீர், அல்ஹாஜ் எம். ஏ. இந்தியாஸ், அல்ஹாஜ் சித்திக் ஆகியோர் இவ்வாறு ஐ. தே. கவின் நியமனம் பெற்ற சில முக்கியத்தர்களாவர்.

## 2000 குடும்பங்களிற்கு பாத்திரம் வழங்க முடிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் இடம்பெயர்ந்த சுமார் இரண்டாயிரம் அகதிகள்குடும்பங்களிற்கு சமையல் பாத்திரங்களை வழங்க முடிவு செய்திருக்கின்றது.

மேற்படி சமையல் பாத்திரங்கள்நேற்று மாலை கொழும்பில் இருந்து 'குமண' கப்பல் மூலம் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளது என தெரியவருகின்றது.

மேலும் இச் சமையல் பாத்திரங்கள் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பில் இயங்கி வருகின்ற முகாம்களில் உள்ள குடும்பங்களிற்கும், ஏனைய முகாம்களில் உள்ள குடும்பங்களிற்கும், மற்றும் முகாம்களில் இல்லாமல் வேறு இடங்களில் தங்கியிருக்கும் குடும்பங்களிற்கும் வழங்க முடிவு செய்திருப்பதாக தெரியவருகின்றது.

[பா], [நி]

## 1000 வருடத்திற்கு முந்திய எலும்புக்கூடு கண்டுபிடிப்பு

[கொழும்பு]

பொலநறுவை மாவட்டத்தில் உள்ள புராதன நகரம் ஒன்றில் ஆயிரம் வருடங்களுக்கு முந்திய மனித எலும்புக்கூடு ஒன்றும் அதனருகில் 4 அடி நீளம் உள்ள வாளும், குதிரை இனத்தைச் சேர்ந்த மிருகம் ஒன்றின் எலும்புக்கூடும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்களம் மேற்படி பகுதியில் நடாத்திய ஆய்வின் போதே இவை கண்டுபிடிக்கப்பட்டதாக தெரியவருகிறது.

இவ் எலும்புக்கூடுகள் பொலநறுவை ராஜதானிக் காலத்தைச் சேர்ந்தவை என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## தொண்டராசிரியர் நியமனம் துரிதப்படுத்த முயற்சி

(கொழும்பு)

தொண்டர் ஆசிரியர்களுக்கு எதிராகக் கிடைத்துள்ள புகார்களை விசாரித்து நியமனங்களைக் காலதாமதமின்றி வழங்குவதற்காக கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் விசாரணைக் குழு, தொண்டர் ஆசிரியர் நியமனங்கள் தாமதமாகியுள்ள கோட்டங்களுக்குச் சென்று விசாரணையைத் துரிதப்படுத்தி நியமனங்களைத் துரிதப்படுத்தும் என தெரிவிக்கப்படுகிறது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 03-04-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8904

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-4129, 41-1227, 24-6448, 41-9746, 26-3633, 28-0882, 26-5351, 27-6191, 42-0970, 24-5676, 26-6984, 27-8751, 22-0777, 24-9606, 24-5092, 40-2573, 28-3476, 42-0759, 42-1464, 42-1721, 26-1741, 42-0849, 42-3815, 28-8589, 24-4238, 24-0523, 26-6998.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-3071, 24-8353, 27-0849, 27-0994, 26-3812, 40-5216, 27-0089, 22-1414, 26-1346, 26-6826, 27-9492, 24-5121, 27-7822, 28-3119, 43-0916, 28-8444, 28-1062, 42-3965, 26-2174, 27-6439, 26-8810, 24-5258, 42-2151, 42-9325.

### கருத்தரங்கு

சுழிபுரம் பொதுச் சுகாதாரப்பகுதியினரால் போசாக்குக் கருத்தரங்கு ஒன்று நடாத்தப்படவுள்ளது.

மேற்படி கருத்தரங்கு எதிர்வரும் ஏழாம் திகதி காலை 9-00 மணியளவில் தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தில் நடைபெறும். இக் கருத்தரங்கில் பாடசாலை முன்னிலைப் பிள்ளைகளுக்கான போசாக்கும், கீரை வகைகளினால் சத்துணவும் என்ற தலைப்பில் தொல்புரம் மத்தி குடும்பநலசேவையாளர் உரையாற்றவுள்ளார்.

மேலும் இந் நிகழ்வின்போது 5 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு (Vermox) பூச்சி மருந்து வழங்கப்படவுள்ளதென சுழிபுரம், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க. கந்தையா அவர்கள் தெரிவித்துள்ளார்.

(41)

### மாகாண சபை

இந்த வேட்பாளர் பட்டியலில் இ. தொ. கா வின் இருபத்தொரு உறுப்பினர்கள்இடம் பெற்றுள்ளனர் என்பதும், வெளிநாட்டமைச்சரின் பாரியார் திருமதி இவன் ஹேரத் வடமேல் மாகாண சபைக்குப் போட்டியிடுகிறார் என்பதும், கொழும்பு மாநகர முன்னாள் மேயர் உசைன் முகம்மது மேல் மாகாணத்தில் ஐ. தே. க.பட்டியலில் போட்டியிடுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### சுதந்திரக்கட்சி

குழுவிற்குத் தலைமை வகிப்பார் எனக் கட்சிவட்டாரங்கள் கூறுகின்றன.

சுதந்திரக் கட்சிக்குள் தாய்-மகன் உள்கட்சிப் பூசல் நிலவி வருவது தெரிந்ததே.

### சந்திரசேகரனை

சந்திரசேகரன் மீதான வழக்கு இம்மாதம் 22, 23-ம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

### பெருமாளை

நிலைகுறித்து பிரேமச்சந்திரன் வரதராஜப் பெருமாளுடன் ஆலோசனை கலப்பார் எனவும் தெரியவருகிறது.

வரதராஜப்பெருமாள் இரகசியமான இடத்தில் இந்திய அரசினால் வைக்கப்பட்டுள்ளார் எனவும், சென்னையில் நடைபெற்ற ஈ. பி. ஆர். எல். எவ் இரண்டாவது மகாநாட்டில் வரதராஜப்பெருமாள் கலந்துகொள்ள இந்திய அரசு அனுமதிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தீர்வு காணப்படும் வரை சுபீட்சம் ஏற்படமாட்டாது

**-ரொனி டி மெல்**

(கொழும்பு)

''இனப்பிரச்சினைக்குத் தீர்க்கமானதும் தமிழ்மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமானதீர்வு காணப்படும்வரை இந்நாட்டில் சுபீட்சம் என்ற பேச்சுக்கேஇடமில்லை. இனப்பிரச்சினை இந்நாட்டில் இருக்கும் வரை இங்கு அபிவிருத்தியும், பொருளாதார வளர்ச்சியும் ஏற்படாது. எனவே அரசியல் கட்சிகள் சமாதானத்திற்கான வழிமுறைகளை மேற்கொண்டு நாட்டின் எதிர்காலத்தைச் சுபீட்சப் பாதையில் இட்டுச்செல்ல முன் வர வேண்டும்''

இவ்வாறு முன்னாள் நிதி அமைச்சர் ரொனி டி மெல் அவிசாவளையிலுள்ள பாடசாலை ஒன்றில் பரிசளிப்பு வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்;

''தேசிய வருமானத்தின் முக்காற் பங்கு இராணுவ நடவடிக்கைகளுக்காக செலவிடப்படுகிறது. நேர்வழியால் செலவிடப்படும் தொகை 23 பில்லியனாக இருக்கும்போது கணக்கிடப்படாத செலவினம் பலகோடி ரூபாவாகும். இப்படிச் செலவழிக்கப்படும் பணம் பொதுமக்களுடையது ஆகும்.

''உலகத் தலைநகரங்களை விடக் கொழும்பில் சில பொருள்களின் விலை உயர்ந்திருக்கிறது''

''நாட்டில் சமாதானம் ஏற்பட்டால் மட்டுமே பொருளாதாரப் பிரச்சினைக்கு முடிவு காணமுடியும். இதனைச் சீர்தூக்கிப் பார்த்து நாட்டின் மீதும் மக்கள்மீதும் அக்கறை உள்ளவர்கள் என்றால் அரசியல்வாதிகள் சமாதானப் பேச்சுக்கு வழிசமைக்க வேண்டும்.

வரட்டுக்கௌரவமும், ஸ்திரமற்ற அரசியல் கொள்கையும் நாட்டிற்கு நன்மைதரப்போவதில்லை. இதனை ஒவ்வொரு அரசியல்வாதியும்உணர வேண்டும் அல்லது மக்கள் உணர வைக்கவேண்டும்'' என்றார்.

### பங்குனி உத்தரம்

(குருநகர்)

நாகேஸ்வரம், அளவெட்டி தெற்கு சிறிநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் பங்குனி உத்தரவிழா நாளை திங்கட்கிழமை சிறப்பாக நடைபெறுமென தெரிவிக்கப்படுகிறது.

(21)

# மாகாணசபைத் தேர்தல் சூடு பிடிக்கின்றது

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் கடந்த முதலாம் திகதிமுதல் ஏற்றுக்கொள்ளப்பட ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து தேர்தல் களம் சூடு பிடித்திருக்கிறது. கடந்த மாகாணசபைத் தேர்தலைப் பகிஷ்கரித்தசிறிலங்கா சுதந்திரக்கட்சி இம்முறை தேர்தல் களத்தில் குதித்துள்ளது. இதனால் இத் தேர்தல் களம் பரபரப்பாக உள்ளது.

தேர்தல் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படுவதைக் கண்காணிப்பதற்காக இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய சார்க் மாநாடுகளைச் சேர்ந்த தேர்தல் கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த அதிகாரிகளும்கொழும்புக்கு வந்துள்ளனர்.

இவர்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்யும் இறுதித் திகதியாகிய இம் மாதம் 8ஆம் திகதிவரை இங்கு தங்கியிருந்து நிலைமைகளைஅவதானிப்பார்கள்.

மேற்படி தேர்தலில் போட்டியிடப்போவதாக அறிவித்த அரசியல் கட்சிகள் யாவும் இறுதிநேரத்தில் வேட்பாளர் பட்டியலைத் தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றன.

அதேவேளை தேர்தல் வேட்புமனுத் தாக்கல்செய்யப்படுவதைத் தொடர்ந்து தேர்தல் நடைபெற இருக்கும் 17 மாவட்டங்களிலும் உள்ள அரச செயலகங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது. செயலகங்களில் மாவட்ட செயலாளர்கள் தேர்தல் அதிகாரிகளாக கடமையாற்றுவர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. செயலகப்பகுதிகளில் மக்கள் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

### படுகாயம்

மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து பயணம் செய்து கொண்டிருந்த ஒருவர் அதிலிருந்து வீழ்ந்தமையால் பலத்த காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து யாழ். மருத்துவமனைக்கு அவசர சிகிச்சைக்காக கொண்டுவரப்பட்டார்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு முன்பாக நடந்த இவ் விபத்தில் சாவகச்சேரி பெரும்குளத்தைச் சேர்ந்த சிவராசா புஷ்பராணி [வயது38] என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார்.

[86]


வாருங்கள் பாருங்கள்

# இன்று இரண்டு காட்சிகள்

திருமறைக் கலாமன்றம் வழங்கும்

4-4-93 **பலிக்களம்** 4-4-93

பக்தி இசை, உரை நாடகம்

**1ஆம் காட்சி மாலை 6-45 மணி**

**2ஆம் காட்சி இரவு 9-30 மணி**

**இடம்: மன்ற அரங்கு யாழ்ப்பாணம்**

(இரண்டாம் காட்சிக்கு ஆசனப்பதிவு செய்து கொள்ளலாம்.) (சி/6330)



இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.